இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 38 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆவணி 31 – திங்கள்கிழமை 16 செப்டம்பர் 2024 – வெளியீர் 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 38 : Thiruvalluvar Year - 2055 - Aavani 31 - Monday 16 September 2024 - Dak 16 Pages ₹ 5.00





முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.9.2024) திராவிட முன்னேற்றக் கழகத்தின் பவள விழாவை முன்னிட்டு சென்னை, அண்ணா அறிவாலய கட்டடத்தின் முகப்பில் நிறுவப்பட்டுள்ள 75ஆம் ஆண்டு பவள விழா இலச்சினையை திறந்து வைத்தார். இந்நிகழ்வில், நீர்வளத்துறை அமைச்சரும், கழகப் பொதுச் செயலாளருமான துரைமுருகன், மக்களவை கழகக் குழுத் தலைவரும், கழகப் பொருளாளருமான டி.ஆர்.பாலு உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

## அறிஞர் அண்ணா 116வது பிறந்த நாள் - கழகத்தின் பவள விழா!

# அண்ணா சிலைக்கு மரியாதை - பவள விழா இலச்சினை திறப்பு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடந்தேறின!

**சென்னை, செப். 16 -**

**பேரறிஞர் அண்ணாவின் 116வது பிறந்த நாள் - கழக பவளவிழாவை முன்னிட்டு தி.மு.க. தலைமை அலுவலகமான சென்னை - அண்ணா அறிவாலயத்தில் பேரறிஞர் அண்ணா சிலைக்கும், படத்திற்கும் மாலை அணிவித்து, தி.மு.க. பவளவிழா இலச்சினையை கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

தமிழர்களுக்கு மொழி உணர்வு ஊட்டி, தமிழினத்துக்கு முகவரி தந்து, முத்தமிழால் அரசியலில் புதிய பாதையை அமைத்துக் கொடுத்த தென்னாட்டுக் காந்தி, திராவிட புத்தர் பேரறிஞர் அண்ணாவின் 116வது பிறந்த நாள் நேற்று கொண்டாடப் பட்டது.

இதனையொட்டி, சென்னை அண்ணா சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச்சிலைக்கு கீழ் வைக்கப்பட்டிருந்த அவரது உருவப்படத்துக்கு தமிழ் நாடு அரசு சார்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

**வள்ளுவர்கோட்டம்!**

இதைத்தொடர்ந்து, சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே அமைந்துள்ள காஞ்சி தந்த காவிய புதல்வன், பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்துக்கு கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

**அண்ணா அறிவாலயம்!**

பின்னர், தி.மு.க. தலைமை அலுவலகமான, சென்னை அண்ணா அறிவாலயத்தில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்பட்ட அவரது உருவப்படத்திற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

**பவளவிழா இலச்சினை!**

தி.மு.க.வின் 75வது ஆண்டு பவளவிழாவை முன்னிட்டு, தலைமை அலுவலகமான சென்னை அண்ணா அறிவாலயத்தில், தி.மு.க. பவளவிழா இலச்சினை அமைக்கப்பட்டுள்ளது. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் என முப்பெரும் தலைவர்கள் உருவம் பொறித்த இலச்சினையில், 75 தி.மு.க. பவள விழா என்றும், உதய சூரியனின் சின்னமும் பொறிக்கப் பட்டுள்ளது. இந்நிலையில் தி.மு.க. பவளவிழா இலச்சினையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சிகளில் தி.மு.க. பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப் பொதுச் செயலாளர்கள் இ.பெரியசாமி, க.பொன்முடி, கனிமொழி கருணாநிதி எம்.பி. மற்றும் அமைச்சர்கள் எ.வ.வேலு, உதயநிதி ஸ்டாலின், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தலைமை நிலையச் செயலாளர்கள் பூச்சி முருகன், துறைமுகம் காஜா, சென்னை மாநகர மேயர் பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**அறிவகம்!**

இதைத்தொடர்ந்து, தி.மு.க.வின் 75வது ஆண்டு பவள விழாவை முன்னிட்டு சென்னை ராயபுரம் அறிவகத்தில், அமைக்கப்பட்டுள்ள பவள விழா இலச்சினையை தி.மு.க. பொதுச் செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு ஆகியோர் திறந்து வைத்தனர்.

இதையடுத்து, தி.மு.க. கொடியை ஏற்றி வைத்து பேரறிஞர் அண்ணா திருவுருவப் படத்திற்கு இருவரும் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

**அன்பகம்!**

இதேபோன்று, சென்னை தேனாம்பேட்டையில் உள்ள அன்பகத்தில் அமைக்கப்பட்டுள்ள தி.மு.க. பவள விழா இலச்சினையை, தி.மு.க. இளைஞரணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் எ.வ.வேலு, சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ., மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், எம்.எல்.ஏ.க்கள் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, ஜே.ஜே.எபினேசர், சென்னை மண்டல மாவட்ட அமைப்பாளர்கள், சென்னை மண்டல துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணியை சேர்ந்த நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**தமிழ்நாடு முழுவதும் அண்ணா பிறந்த நாள் விழா!**

இதேபோன்று தமிழ்நாடு முழுவதும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு கழகத்தினர் கழகக் கொடி ஏற்றி, அவரது திருவுருவப் படத்திற்கு - திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

**இல்லங்கள் தோறும் கழகக் கொடி!**


கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தி.மு.க. பவள விழாவை முன்னிட்டு இல்லங்கள்தோறும் கழகக் கொடியைஏற்றிவைத்திட வேண்டும் என்று கோரிக்கை வைத்ததற்கிணங்க தமிழ்நாடு முழுவதும் கழகத்தினர், கழக முன்னணியினர் தமது இல்லங்கள், வணிக வளாகங்கள் மற்றும் வீதிகளில் கழகக் கொடியேற்றப்பட்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழா விமர்சையாக கொண்டாடப் பட்டது.

---

## ஒரு இனத்தின் அரசாக செயல்பட

# நம்மை ஆளாக்கியவர் பேரறிஞர் அண்ணா!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!



**சென்னை, செப். 16 -**

**பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை யொட்டி, கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “ஒரு இனத்தின் அரசாக செயல்பட நம்மை ஆளாக்கியவர் பேரறிஞர் அண்ணா” என்று புகழாரம் சூட்டி சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :–

**75 ஆண்டுகளாக திராவிட முன்னேற்றக் கழகம் இந்தச் சமூகத்தில் மாற்றங்கள் பல ஏற்படுத்தி, தலைசிறந்த தமிழ்நாடாக நாம் தலைநிமிர்ந்து நடை போட வித்திட்டவர் நம் பேரறிஞர் அண்ணா!**

**தலைவர் கலைஞர் அவர்கள் தன் இறுதி மூச்சிலும் “அண்ணா... அண்ணா...” என்றே பேசினார்; எழுதினார். அத்தகைய உணர்வுப்பூர்வமான தம்பிமார்களைப் பெற்ற ஒப்பற்ற பெருமகன்!**

**ஒரு இனத்தின் அரசாகச் செயல்பட நம்மை ஆளாக்கிய பேரறிஞர் பெருந்தகை அண்ணாவைப் போற்றி வணங்குகிறேன்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பக்கத்தில் புகழாரம் சூட்டி பதிவிட்டுள்ளார்.